**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | பிரியா (கிராம நிர்வாக அலுவலர்) |
| Husband Name | : | உதயசந்திரன் |
| Address | : | களரம்பட்டி |
| Age | : | 31/2025 |

**தேதி : 09.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் களரம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் களரம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். கடந்த 08.09.2024ம் தேதி திருகுடமுழுக்கு களரம்பட்டி தேம்பாடி அம்மன் கோவிலில் நடந்தது. கோவிலில் குடமுழுக்கு நடைபெறுவதற்கு முன்பு குடமுழுக்கு அன்று சிறப்பு செய்வதற்காக தேவேந்திரகுல வேளாளர் சமூகத்திலிருந்து கேட்டனர். இது தொடர்பாக வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தையில் தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருதரப்பினரும் கலந்துகொண்டு சிறப்பாக குடமுழுக்கு நடைபெற்றது. தேவேந்திரகுல வேளாளர் சார்பில் எங்களுக்கும் மண்டல பூஜையில் சிறப்பு செய்ய ஒருநாள் கேட்டனர். மீண்டும் ஒருமுறை வட்டாட்சியர் தலைமையில் ஒருமுறை அமைதி பேச்சுவார்த்தை நடந்தது.

பிறகு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டாதநிலையில் மீண்டும் சார் ஆட்சியர் தலைமையில் நடந்தபோது சார்ஆட்சியர் மண்டல பூஜை நடந்துமுடிந்துவிட்டது. ஆதலால் மீண்டும் ஒருமுறை சிறப்பு பூஜைக்கு அனுமதி அளிக்க முடியாது என்று கூறியுள்ளார். அங்கு தேவேந்திரகுல தரப்பினர் சரி என்று ஒப்புக்கொண்டு சென்றுவிட்டனர். 28.10.2024 அன்று கடைசி நாள் பூஜையாக மண்டல சிறப்பு பூஜை நடந்து முடிந்துவிட்டது. பிறகு சார்ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தும்போது ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜையில் கலந்துகொள்ளுமாறும், கும்பலாக வராமல் இருக்க அறிவுறுத்தினார். பிறகு மண்டல பூஜையின் கடைசி தினத்தில் 28.10.2024 அன்று மதியம் 12.00 மணி அளவில் கும்பலாக வந்து தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலைதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைதுறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த தேவேந்திரகுல வேளாளர்குல தரப்பினர் ராஜா, வினோத், ரஜினிகாந்த், மோகனா, துளசி, அகல்யா, தனசேகர் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக அறநிலையதுறை செயல் அலுவலர் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அமைதி பேச்சுவார்த்தை எதிரிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடந்தது குறித்து நான் எனது போலீஸார்

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சார் ஆட்சியாளர் பேச்சுவார்த்தை நடத்தும்போது தனித்தனியாக குடும்பங்களாக எதிரிகள் வரவேண்டும் என்று கூறியதை நான் எனது போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் பெயர் எங்களுக்கு நான் வாக்காளர் பட்டியலை பார்த்தும், சிலரை அதற்கு முன்பே எனக்கு தெரியும். அ.சா.1 என்னை கேட்டுதான் புகார் கொடுத்தார்எ ன்றால் இல்லை. அவர் வாக்காளர் பட்டியலை வைத்து அவர்கள் அடையாளம் கண்டுகொண்டனர். புகாரை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகாரை கொடுக்கும்போது நான் அ.சா.1 உடன் சென்றேனா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் கோவிலில்தான் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று தேங்காய், பூ, பழம் பூஜை பொருட்களை எதிரிகள் எடுத்துவந்தனர் என்றால் சரிதான். அப்பொழுது பிற்படுத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த நாளன்று பெரம்பலூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், இந்து அறநிலையதுறை அதிகாரிகள் சம்பவ இடத்தில் இருந்தனர் என்றால் சரிதான். இருதரப்பினரிடையே பிரச்சனை ஏற்பட்டுவிடக்கூமாது என்பதற்காக காவல் ஆய்வாளர் கோவில் கேட்டை இழுத்து மூடிவிட்டார் என்றால் சரிதான். இது சம்மந்தமாக போலீஸார் என்னை என்றைய தினம் விசாரித்தார்கள் என்றால் 02.11.2024. சம்பவம் நடந்த இடத்தில் போலீஸார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னப்படி சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அ.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.